வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
கும்மிடிப்பூண்டி

வழக்கு எண் :MC 9 /2021

வழக்கு சாட்சி : PW - 1

நாள் :12.01.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நித்யா | ஜாதி | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் M.A, B.Ed., படித்துள்ளேன். எனக்கும் என் கணவருக்கும் 2018 ஆம் வருடம் திருமணம் நடந்தது. என்னுடன் உடன் பிறந்தவர் ஒரு சகோதரர் உள்ளார். என் சகோதரர் அவர் தந்தை தாயாருடன் வசிக்கிறார். என் சகோதரர் தனி குடுத்தனம் இருக்கிறார் என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை முதலில் சிப்காட்டில் உள்ள நிறுவனத்தில் வேலை செய்தார் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். வீட்டு வாடகை வருகிறது. கோயம்புத்தூரில் இருக்கும் வரை என் கணவர் என்னை நன்றாக பார்த்து கொண்டார் நான் வீட்டில் தான் இருந்தேன் என்றால் அது பொய். என் கணவர் ஊருக்கு போய் திரும்பிய பிறகு 2011 முதல் 2019 வரை கோயம்புத்தூரிலுள்ள கிணத்துகடவில் இருந்தோம் என்றால் சரிதான். நான் கோயம்புத்தூரில் ஆசிரியராக பணி செய்தேன். ஆரம்பத்தில் மாத வருமானம் 6500 ரூபாய் மற்றும் திரும்ப வரும்போது மாதம் 25000 ரூபாய் கிடைக்கும். தற்போது நான் எங்கும் வேலை செய்யவில்லை. நான் தற்போது தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன் என்றும் சென்னையில் வேலை செய்வதற்காகவும் மனம்போல் வாழ்வதற்காக மேற்படி விவாகரத்து வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் Don bosco Matric பள்ளியில் படிக்கிறாள். மகள் படிக்கும் பள்ளிக்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் 1 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி வழக்கில் என் தந்தை தாய் குடியிருக்கும் வீட்டில் தான் வசிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் கடந்த 2 ஆண்டுகளாக தான் அங்குதான் இருக்கிறேன். எனக்கு வருமானம் நன்றாக வருவதால் தான் என் கணவரை பிரிந்து பொன்னேரி நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என் தாய் தந்தை தான் பார்த்து கொள்கிறார்கள். என் கணவரின் சொத்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளது சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மாமியார் வீடு கட்டியுள்ளது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஒரு வங்கியில் கணக்கு உள்ளது. எனக்கு வேறு சில வங்கிகளில் கணக்கு உள்ளது என்றும் அதை மறைக்க நீதிமன்றத்தில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 வருடத்திற்குள் உள்ள வங்கி பரிமாற்ற கணக்கு மட்டும் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் மேற்படி வழக்கில் அதேபோல் தாக்கல் செய்யவீல்லை என்றால்

சரிதான். வருமானத்தை மறைக்க வேண்டி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Assets and Liablites உண்மையை மறைத்து பொய்யான தகவல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மகள் படிக்கும் பள்ளியின் ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் என் மகளுக்கும் மருத்துவ சிகிச்சைக்காக ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சென்னை மற்றும் திருபுவனம் அசையும் மற்றும் அசையா சொத்து உள்ளது என்றும் அதை Assets and Liablites ல் காட்டவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் மாதவருமானம் என்னவென்று எனக்கு தெரியாது. பொன்னேரியில் தாக்கல் செய்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் மறைத்து தாக்கல் செய்தேன் என்றால் முதலில் நான் தான் தாக்கல் செய்தேன் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது ஆசிரியராக தான் பணிபுரிந்து வருகிருறேன் என்றும் எனக்கு மாத வருமானம் நன்றாக வருகிறது என்றும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல நான் எங்கும் வேலை செய்யவில்லை.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)